People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org



# சென்னையில் தொடரும் காவல் மரணங்கள்
## பத்திரிகை செய்தி

புதுப்பேட்டையில் உறவினர் வீட்டில் நடைபெற்ற விசேச நிகழ்விற்காக பங்கேற்க சென்ற முகேஷ் மற்றும் கண்ணகிநகரை சார்ந்த வசந்த்(20) விக்கி(எ)மோகன்(22) ஆகியோர்கள் 12.10.2016 அன்று மாலையில் புதுப்பேட்டைக்கு வந்து தங்கி உள்ளனர். அதன்பின்பு அடுத்தநாள் 13.10.2016 அன்று காலையில் பாத்ரூம் செல்வதற்காக அருகாமையில் இருந்த கூவம் வரும்போது, எக்மோர் காவல்நிலைய காவலர்கள் மூன்று நபர்கயையும் மறித்து விசாரித்துள்ளனர். அப்போது முகேஷ் நாங்கள் கண்ணகிநகரை சேர்ந்தவர்கள். ஒரு விசேசத்தில் பங்கேற்க வந்தோம் என்று சொல்லியுள்ளார்கள். அதன்பின் போலீசார் கண்ணகிநகரை சார்ந்த நீங்கள் எதற்காக இங்கே வந்தீர்கள் என கூறி லத்தியால் அடித்துள்ளனர். அடிதாங்காமல் பயந்து மூன்று பேரும் கூவம் கரை வழியாக ஓடி உள்ளனர். பின்னாடியே துரத்திக் கொண்டே ஓடிவந்த காவலர்கள் கிழே கிடந்த கற்களை எடுத்து எறிந்துள்ளனர். இதனால் முகேஷுக்கு பின் தலையில் மண்டை பிளந்து ரத்தக்காயம் ஏற்பட்டுள்ளது. மேலும் விக்கி(எ)மோகன் என்பவருக்கு பின்பக்கம் தலையில் காயம் ஏற்பட்டுள்ளது. மேலும் வசந்த் என்பவர் மட்டும் போலீஸாரல் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதற்கு முன் ஏற்கெனவே 10.03.2016 அன்று முகேஷ் கண்ணகிநகரில் உள்ள தனது வீட்டில் இருந்த போது சீருடை அணியாத காவல்துறையினர் சுமார் 8 நபர்கள் கொண்ட குழுவினர் இரவு 11.00 மணியளவில் தூக்கிச் சென்று அருகாமையில் இருந்த பறக்கும் ரயில் பாலத்திற்கு கீழ் உள்ள இருட்டான பகுதியில் வைத்து அடித்துள்ளனர்.

இதன் பின் நாம் பிடிக்க வேண்டிய நபருக்கு பதிலாக வேறு நபரான முகேசை தவறாக பிடித்துவிட்டோம் என அறிந்து காவல்துறையினர் தங்களது தாக்குதலினால் இரத்த காயமடைந்த முகேசை அடிப்படியே திரும்ப வந்து கண்ணகிநகரிலே விட்டு சென்று விட்டனர்.

சட்டவிரோத செயல்பாடுகளில் ஈடுபட்ட காவல்துறையின் மீது நடவடிக்கை எடுக்க கோரி 12.03.2016 அன்று சென்னை மாநகர் காவல்துறை ஆணையரிடம், முகேசின் அம்மா சுமதி (31)

அவர்கள் புகார் கொடுத்தார். புகாரின் அடிப்படையில் தரமணி காவல் நிலைய குற்றப்பிரிவு தலைமை காவலர் சரணவன் (36) ஊர்காவல்படையை சார்ந்த செந்தில் (25) மற்றும் பிரண்ட்ஆப் போலீஸ் படையை சார்ந்த தனபால் (25) ஆகியோர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

முகேஷ் 14.10.2016 இன்று காலையில் பிணமாக புதுப்பேட்டை கூவத்தில் கிடந்ததை முகேசின் பெற்றோர்கள் கண்டறிந்துள்ளனர். காவல் துறையால் துரத்திச் செல்லப்பட்ட முகேசை காயப்படுத்தி அதன்பின் கூவத்தில் தள்ளபட்டிருக்கலாம் என சந்தேகம் எழுகின்றது.

ஒரு DGP அந்தஸ்தில் இருக்கும் அதிகாரியின் கீழ் இயங்கும் சென்னை மாநகர் காவல்துறையினரால் 22.09.2016 அன்று கண்ணகிநகர் காவல் நிலையத்தில் கார்த்திக் மரணம், அதன்பின் மணலி காவல் நிலையத்தில் விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்ட ஸ்ரீகாந்த பாலாஜி 13.10.2016 அன்று மரணம் இப்போது முகேஷ் மரணம் என சென்னையில் காவல் மரணங்கள் அதிகாரித்துக் கொண்டே இருக்கின்றன.

சென்னை மாநகர காவல் துயையினர் குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவில் 41 கீழ் குறிப்பிட்டுள்ளபடி சட்டத்தையோ, அர்னிஷ் குமார் எதிர் பீகார் மாநில அரசு என்ற 2014 –ஆம் ஆண்டு திர்ப்பையோ பின்பற்றாமல் விசாரணை என்ற பெயரில் சட்ட விரோதமாக கைது செய்து சித்திரவதை செய்வதால், விசாரணைக்குள்ளான நபர் மரணமடைகிறார். இதனால் சித்திரவதையில் ஈடுபடும் காவலர்களை பாதுகாக்க திட்டமிட்டு புதுயுத்திகளை கையாண்டு பாதுகாக்கும் பணிகளில் உயர்மட்ட காவல் துறையின் செயல்படுகிறார்கள் என்பதனை அறியமுடிகின்றது.

இப்போக்கினை மக்கள் கண்காணிப்பகம் வன்மையாக கண்டிக்கின்றது. மேலும் குற்றவியல் நடைமுறை சட்டம் 176 1(A) கீழ் வழக்கு பதிவு செய்து மேலும் நீதித்துறை நடுவர் மூலம் விசாரணை செய்து குற்றத்தில் ஈடுபட்ட காவலர்கள் இடைநீக்கம் செய்யப்பட வேண்டும். மாநில மனித உரிமை ஆணையம் இவ்வழக்கை தாமாக முன்வந்து எடுத்துக் கொள்ளவேண்டும். மேலும் பாதிக்கப்பட்ட முகேஷ் குடும்பத்திற்கு 20 லட்ச ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டுமென்று மக்கள் கண்காணிப்பம் கோருகின்றது.

தேதி:14.10.2016
இடம்: மதுரை

இப்படிக்கு

(ஹென்றி திபேன்)